## வெள்ளோட்டில்

# காலிங்கராயன் சிலை திறப்பு விழா

# 19–ந் தேதி நடக்கிறது

ஈரோடு, ஜன.17–

ஈரோட்டை அடுத்த வெள் ளோட்டில் காலிங்கராயன் சிலை திறப்புவிழா வருகிற 19–ந் தேதி நடக்கிறது.

### சிலை திறப்பு விழா

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய பகுதிகள் வழியாக ஓடும் காளிங்கராயன் கால் வாயை வெட்டியவர் காலிங்க ராயன்.

அவருடைய நினைவாக தென்முகம் வெள்ளோடு சாத் தந்தை குலம் ராசாசுவாமி நற் பணி மன்றம் சார்பில் சிலை திறக்கப்பட உள்ளது. இதன் திறப்பு விழா வருகிற 19–ந் தேதி வெள்ளோட்டில் நடக்கிறது.

### அமைச்சர்கள்

விழாவுக்கு சென்னிமலை ஊராட்சி ஒன்றிய தலைவர் கே.சின்னுசாமி கவுண்டர் தலைமை தாங்குகிறார். மாவட்ட ஊராட்சிக்குழு உறுப் பினர் மணி என்கிற பி.செங் கோட்டையன் முன்னிலை வகிக்கிறார்.

தமிழக கைத்தறித்துறை அமைச்சர் என்.கே.கே.பி.ராஜா விழாவில் கலந்துகொண்டு காலிங்கராயன் சிலையை திறந்து வைக்கிறார். மத்திய சமூ கநீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை ராஜாங்க மந்திரி சுப்பு லட்சுமி ஜெகதீசன் விழாவில் கலந்துகொண்டு வெள்ளோடு காணியாளர்கள் வரலாற்று நூல் என்கிற புத்தகத்தை வெளி யிடுகிறார். புத்தகத்தை எஸ்.கே. கார்வேந்தன் எம்.பி பெற்றுக் கொள்கிறார்.

### எம்.எல்.ஏ.க்கள்

விடியல் சேகர் எம்.எல்.ஏ. , ஆர்.எம்.பழனிச்சாமி எம்.எல். ஏ., ஏ.எம்.ஆர்.காலிங்கராயர், குமாரவலசு ஊராட்சி தலை வர் சந்திரகலா சக்திவேல் ஆகி யோர் வாழ்த்தி பேசுகிறார்கள். கல்வெட்டு ஆராய்ச்சியாளர் புலவர் செ.ராசு சிறப்புரை யாற்றுகிறார்.

நற்பணி மன்ற தலைவர் என்.டி.கண்ணுசாமி வரவேற்கி றார். கனகபுரம் ஊராட்சி தலை வர் கே.ஏ.மகுமேஸ்வரன் நன்றி கூறுகிறார்.

---

மான பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சனின் சகோதரர் ஜெர் மைன் ஜாக்சன், ஷில்பாவுக்கு “உங்களை குற்றம் சாட்டுகிற வர்கள், தங்கள் முகத்தை முதலில் கண்ணாடியில் பார்த்துக்கொள் ளட்டும்” என்று ஆறுதல் கூறி தேற்றினார்.

### விசாரணை

ஷில்பா ஷெட்டியிடம் இன வெறியுடன் நடந்து கொண்ட தாக ‘ஆப்காம்’ அமைப்புக்கு 200–க்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளன. இதுபற்றி அந்த அமைப்பு, முதல்கட்ட விசா ரணை நடத்திவிட்டு, ‘பிக் பிரதர்’ நிகழ்ச்சி தயாரிப்பாளர்களிடம் தகவல் தெரிவித்தது.

அதன்பேரில், இந்த புகார்கள் குறித்து நிகழ்ச்சி தயாரிப்பா ளர்கள் விசாரணை நடத்தி வரு கிறார்கள். பிரபலமான எங்கள் நிகழ்ச்சியில் ‘இனவெறி’யை புகுத் துவதை சகித்துக் கொள்ளமாட் டோம் என்று ‘சேனல் 4’ நிர்வா கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

Edited Printed and Published by V. SUNDARESON for Thanthi Trust at the Thanthi Press. 16, Nachiappa Street, Erode-638001. and at 86, E.V.K. Sampath Road, Vepery, Chennai-600 007.
RNI No: 55395/94